சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 56/2022

**PW 1 செல்வராஜ்** **08.08.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விபத்து சமயத்தில் TN 40 c 6522 என்ற லாரியில் லாரிக்கு பின்புறம் என்னுடன் சேர்த்து எத்தனை பேர் சென்றோம் என கேட்டால் என்னுடன் சேர்த்து 4 பேர் சென்றோம். லாரியின் பின்புறம் செல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. நான் லோடுமேன் என்று சொல்வதை பொருத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தவறகா சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் லாரியில் பின்புறம் பயணம் செய்யக்கூடாது என்ற நிலையில் என்னுடைய அஜாக்கரதை காரணமாக தான் விபத்து நடைபெற்றது என்று சொன்னால் அது சரியல்ல. லாரியானது கவிழ்ந்து விட்டது. நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். பின்னிட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும், அதனால் 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் தர தேவையில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி